செ.வெ.எண்.40 நாள்.15.11.2017.

**திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், காவலாக்குறிச்சி, மேலமருதப்பபுரம் மற்றும் மானூர் ஒன்றியம் வடுகன்பட்டி கிராமத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் செல்படுத்தப்பட்டு வரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

---

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், காவலாக்குறிச்சி மற்றும் மேலமருதப்பபுரம் கிராமத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் செல்படுத்தப்பட்டு வரும் நிலத்தடி குழாய் வழிப்பாசனம் மற்றம் பண்ணைக் குட்டை அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்கள் 15.11.2017 அன்று திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை பொறியாளர் துறை மூலம் சிறப்புத் திட்டமான சிற்றாறு உபவடிநிலப்பகுதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வீரகேரளம்புதூர் திட்டம் ஆலங்குளம் வட்டாரத்திற்குட்பட்ட காவலாக்குறச்சி கிராமத்தில் காவலாக்குறிச்சி கண்மாயில் 148.00 ஹெக்டேர் பாசனப்பகுதியில் ரூ. 51.50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ள நிலத்தடி குழாய் வழிப் பாசன அமைப்பு, மேலமருதப்பபுரம் கிராமத்தில் ரூ1.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்ட பண்ணைக் குட்டை அமைக்கும் பணி ஆகியவற்றை ஆய்வு செய்தார். பண்ணைக்குட்டை பயனாளி திரு.சோமசுந்தரம் அவர்களிடம் நன்னீர் மீன்வளர்ப்பு மேற்கொண்டு வருமானத்தைப் பெருக்கிட அறிவுரை வழங்கினார்.

மேலும், மானூர் ஒன்றியம் வடுகன்பட்டி கிராமத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 80% அரசு மானியத்துடன் ரூ. 6.89 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சூரியமின் இறைப்பான் பணியையும் ஆய்வு செய்தார்.

திட்டப் பணிகள் ஆய்வுக்கு திருநெல்வேலி மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை செயற் பொறியாளர் திரு.கு.முருகன், பாசனப்பகுதி மேன்மைத் திட்ட செயற் பொறியாளர் திரு.முத்துராயப்பன், உதவி செயற் பொறியாளர்கள் திரு.இரா.பாலாஜி, திரு.தா.டேனிஸ்டன் மற்றும் வேளாண்துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.